

## சேலம் விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகம் சார்பில்

# அரசு மருத்துவக்கல்லூரி மாணவர்கள் 74 பேருக்கு நிதி உதவி

## கலெக்டர் கார்மேகத்திடம் வழங்கப்பட்டது

சேலம், பிப்.13–

அரசு பள்ளியில் படித்து 7.5 சதவீத உள் ஒதுக்கீட்டின் கீழ் அரசு மருத்துவக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ். மற்றும் பல் மருத்துவ படிப்பில் சேர்ந்த சேலம் மாவட்டத்தை சேர்ந்த 74 மாணவர்களுக்கு உதவிட, சேலம் விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன நிகர்நிலை பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் எஸ்.சரவணன் முடிவு செய்தார்.

அதன்படி இந்த பல்கலைக் கழக உறுப்பு கல்லூரியான விநாயகா மிஷன்ஸ் கிருபானந்த வாரியார் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை நிர்வாகத்தின் சார்பில், அரசு பள்ளியில் படித்து 7.5சதவீத உள் ஒதுக்கீட்டின் கீழ் அரசு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். மற்றும் பல் மருத்துவ படிப்பில் சேர்ந்த சேலம் மாவட்டத்தை சேர்ந்த 74 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களுக்கான காசோலை கலெக்டர் கார்மேகத்திடம் வழங்கப் பட்டது.

இந்த காசோலையை கலெக்டரிடம் மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் கே.எழில் வேந்தன் வழங்கினார்.

அப்போது சேலம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் டாக்டர் ஆர்.முருகன், பல்கலைக்கழக இணைப் பதிவாளர் பி.தனசேகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.